தமிழ்நாடு அரசு

# இந்து சமய அறநிலையத்துறை

# இணை ஆணையர் அலுவலகம், நாகப்பட்டினம்.

## வேலைவாய்ப்பு விளம்பரம் அறிவிப்பு

கட்டு எண். 01/2020

நாகப்பட்டினம் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட இந்து சமயத்தை சார்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும். பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

| வ. எண். | பணியிடம் | எண்ணிக்கை | ஊதிய விகிதம் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | ஓட்டுநர் | 1 (ஒன்று) | 19500 – 62000 (Level 8) | 1. 8–ம் வகுப்பு தேர்ச்சி<br>2. LMV License with Batch<br>3. நல்ல உடல் தகுதியுடன் இருக்க வேண்டும். |
| 2. | அலுவலக உதவியாளர் | 3 (மூன்று) | 15700 – 50000 (Level 1) | 1. 8–ம் வகுப்பு தேர்ச்சி |
| 3. | இரவு காவலர் | 1 (ஒன்று) | 15700 – 50000 (Level 1) | 2. 8–ம் வகுப்பு தேர்ச்சியின்மை (மிதி வண்டி ஓட்ட தெரிந்தவராகவும் நல்ல உடல் தகுதியுடனும் இருத்தல் வேண்டும். |

முன்னுரிமை

1. ஓட்டுநர் பணியிடத்திற்கு பொதுப்போட்டி முன்னுரிமை அற்றவர்
2. அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பொதுப்போட்டி முன்னுரிமை பெற்றவர். ஆதிதிராவிடர் வகுப்பினை சேர்ந்தவர் (அருந்ததியினர், ஆதரவற்ற விதவை மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. இரவு காவலர் பணியிடத்திற்கு பொதுப்போட்டி முன்னுரிமை அற்றவர்.

| 01.01.2022-ல் வயது வரம்பு | SC/ST | GT | MBC/DNC | BC |
|---|---|---|---|---|
| அதிகபட்ச வயது வரம்பு | 37 | 32 | 34 | 34 |
| குறைந்தபட்ச வயது வரம்பு | 18 | 18 | 18 | 18 |

* அரசு விதிகளின்படி வயது வரம்பு தளர்வு அனுமதிக்கப்படும்.

மேற்கூறிய தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் 22.04.2022 மாலை 5.30 மணிக்குள் கீழ்காணும் ஆவணங்களின் நகல்களில் சான்றிட்டும் புகைப்படத்துடன் சுய விலாசமிட்ட ரூ.25/–க்கான தபால் தலை ஒட்டிய கவர் ஒன்றுடன் கீழ்கண்ட முகவரிக்கு உரிய விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். இருப்பிட முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், கைப்பேசி எண் ஆகியவற்றை தெளிவாகவும், அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்பவர் விண்ணப்பக்கவரில் "அலுவலக உதவியாளர்" பணியிடம் என்றும், இரவுக்காவலர் பணியிடத்திற்கு "இரவு காவலர்" என்றும், ஓட்டுநர் பணியிடத்திற்கு " ஓட்டுநர்" என்றும் பணியிடம் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் வரப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**இணைத்து அனுப்ப வேண்டிய விபரங்கள்:**

1) விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)
2) 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான / பெறாததற்கான கல்வி சான்று நகல்.
3) ஓட்டுநர் உரிமம்
4) பள்ளி மாற்று சான்று நகல்
5) சாதி சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)
6) நாகப்பட்டினம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவு எண், பதிவு சான்று நகல்
7) குடும்ப அடையாள அட்டை நகல்
8) முன்னுரிமைக்கான சான்றின் நகல் (Priority Certificate)
9) இதர தகுதிகள் ஏதும் இருப்பின் அதன் விபரம் மற்றும் நகல்கள்
10) சுய விலாசமிட்ட தபால் தலையுடன் கூடிய உரை–1

குறிப்பு

விண்ணப்ப படிவம் அலுவலக விளம்பர பலகை மற்றும் TNHRCE website–ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**இணை ஆணையர்,**
**இந்து சமய அறநிலையத்துறை**
**நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம்.**

(ஒம்) க. தென்னரசு,
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
நாகப்பட்டினம்.

வெ.ஆணை, எண். 40/ செ.ம.தொ.அ/2022/
நாள்: 22.03.2022, நாகப்பட்டினம்.